சுருக்கம்

வேளாண்மைத் துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஈரோடு விற்பனை குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணையடிப்படையில் திரு. லோ. ராஜா, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டமை – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.வி.1) துறை

அரசாணை (2ப) எண். 124

நாள்: 05.07.2019

திருவள்ளுவர் ஆண்டு 2050,
ஆனித் திங்கள் 20–ஆம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண். விகுப.3/33605/2017, நாள் 07.08.2018 மற்றும் 04.12.2018.
2. அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடிதத்தில், ஈரோடு விற்பனைக்குழுவில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 25.02.2011 அன்று இயற்கை எய்திய திரு சு. லோகநாதன் அவர்களின் வாரிசுதாரா திரு லோ. ராஜா என்பவருக்கு 20.07.2016 ஆம் நாளிட்ட தமது செயல்முறை ஆணையின்படி, ஈரோடு விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகக் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு 05.08.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 05.08.2016 முற்பகல் பணி வரன்முறை செய்து அரசாணை வழங்கிடக் கோரி கருத்துரு மற்றும் ஆவணங்கள் அனுப்பியுள்ளார்.

2) மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் பணியிடங்கள் அனைத்தும் அரசினால் தோற்றுவிக்கப்பட்டதாலும், அமைச்சுப் பணியின் கீழுள்ள இளநிலை உதவியாளர் பணியிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரையறைக்குள் உள்ளதாலும், திரு லோ. ராஜா, என்பவர் ஈரோடு விற்பனைக் குழுவில் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக 05.08.2016 முற்பகல் முதல் பணியாற்றி வருவதைத் தொடர்ந்து அவரது பணியை 05.08.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறையின் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களது பணிவரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(த.பி.பா)

4) எனவே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று ஈரோடு விற்பனைக்குழுவில் கருணையடிப்படையில் 05.08.2016 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. லோ. ராஜா என்பவரின் பணியை இளநிலை உதவியாளர் பதவியில், அவர் அப்பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 05.08.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், தனியரின் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார்.

5) இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண் 25098/க்யூ1/2018–1, நாள் 12,02,2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஜி) துறையின் அ.சா. எண்.5196/ஜி2/2019, நாள் 15.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சென்னை–32.
செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சென்னை–32 மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA) சென்னை–18
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) சென்னை–18
இருப்பிடத் தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை) அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்**
இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள் மற்றும் தணிக்கைத் துறை, சென்னை–108.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 5/7/19.